***<u>கொரோனா (COVID-19) காரணமாக தற்பொழுது நிலவும் தடை காலத்தில் விவசாயிகள் மற்றும் விவசாயத் துறைக்கான வழிகாட்டுதல்கள்</u>***

**தடை காலத்தில் விலக்களிக்கப்பட்ட விவசாயம் மற்றும் அதன் சார்பு துறைகள்/ செயல்பாடுகள்:**

i. கால்நடை மருத்துவமனைகள்
ii. குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயிக்கும் செயல்பாடுகள் உள்ளிட்ட வேளாண் பொருட்கள் கொள்முதல் செய்யும் நிறுவனங்கள்
iii. வேளாண் உற்பத்தி சந்தைக் குழுவால் இயக்கப்படும் அல்லது மாநிலத்தால் அறிவிக்கப்பட்ட மண்டிகள்
iv. வயலில் விவசாயிகள் மற்றும் பண்ணைத் தொழிலாளர்கள் மேற்கொள்ளும் விவசாய நடவடிக்கைகள்
v. பண்ணை இயந்திரங்கள் தொடர்பான இயந்திரங்கள் வாடகைக்கு விடும் மையங்கள் (CHC)
vi. உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் விதைகளின் உற்பத்தி மற்றும் விற்பனை அலகுகள்/ கடைகள்
vii. மாநிலத்திற்கு உட்பட்ட மற்றும் மாநிலங்களுக்கிடையிலான அறுவடை விதைப்பு கருவிகள் வேளாண் தோட்டக்கலை இயந்திரங்கள்

இந்த விலக்களிக்கப்பட்ட துறைகள் விவசாயத்தில் தங்குதடையற்ற செயல்பாடுகள் மேற்கொள்ளவும் தேவைப்படும் இடுபொருட்கள் உடனடியாக கிடைக்கவும் விவசாயிகளுக்கு தடை காலத்தில் எந்த ஒரு சிரமமும் இல்லாமல் இருக்கவும் வழிவகுக்கும். இதை அமல்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சகம் மாநில துறைகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உரிய நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. (உள்துறை அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி, 24, 25 மற்றும் 27 தேதியிட்ட GoI vide No.40-3 / 2020-DM-I (A) மார்ச் 2020, அமைச்சின் வேண்டுகோளின் அடிப்படையில் விதிவிலக்குகளில் 2, 4, 5 மற்றும் 6 ஆகிய பிரிவுகளில் சேர்த்தல் வேளாண்மை மற்றும் உழவர் நலன், அரசு).

அரசாங்கத்தின் கொள்கை வழிமுறைகளின் அடிப்படையில், மாநில அரசுகளின் பல்வேறு அமைச்சகங்கள் / துறைகள் வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் தொடர்ந்து செயல்பாடுகள் நடை பெறுவதற்கு உரிய வழிமுறைகளை வழங்கியுள்ளது.

**விவசாயிகளுக்கான அறிவுரைகள்**

***<u>பயிர்கள் அறுவடை செய்தல் மற்றும் விதைத்தல்:</u>***

கொரோனா(COVID-19) பரவலின் அச்சுறுத்தலுக்கு மத்தியில், ரபி பயிர்கள் முதிர்ச்சியை நெருங்குகின்றன. அறுவடை மற்றும் வேளாண் உற்பத்தி பொருட்களை கையாளுதல் விற்பனைக் கூடங்களுக்கு எடுத்துச் செல்லுதல் ஆகிய அனைத்து செயல்பாடுகளுமே குறித்த காலத்தில் நடைபெறுதல் அவசியமாகும். இருப்பினும், நோயைத் தடுக்க எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதாவது சமூக விலகல், தனிப்பட்ட சுகாதாரத்தை பேணுதல், சோப்பு கொண்டு கைகளை கழுவுதல் , முகக் கவசம் அணிதல், பாதுகாப்பு ஆடை அணிதல், கருவிகள் மற்றும் இயந்திரங்களை சுத்தம் செய்தல் கட்டாயம் பின்பற்ற வேண்டும். ஆகவே வயலில் நடைபெறும் ஒவ்வொரு செயல்பாட்டிலும் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் ஒவ்வொரு அடியிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் சமூக தூரத்தை பின்பற்ற வேண்டும்.

- பல வட மாநிலங்களில் இயந்திரங்கள் மூலம் மேற்கொள்ளும் கோதுமை அறுவடைக் காலம் நெருங்குகிறது. மாநிலத்திற்குள்ளும் மாநிலங்களுக்கு இடையிலும் அவர்களின் இயக்கம் அனுமதிக்கப்பட்டுள்ளது. பழுது, பராமரிப்பு மற்றும் அறுவடை நடவடிக்கைகளில் ஈடுபடும் தொழிலாளர்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் உறுதி செய்யப்பட வேண்டும்.
- கடுகு இரண்டாவது முக்கியமான ரபி பயிர், தற்பொழுது அறுவடை நடந்து வருகிறது மற்றும் ஏற்கனவே அறுவடை செய்யப்பட்ட பயிர் கதிரடிக்கப்பட உள்ளது.
- மேலும் பயறு, மக்காச்சோளம் மற்றும் மிளகாய் அறுவடையும் நடந்து வருகிறது
- தற்பொழுது கரும்பு அறுவடை உச்சத்தில் உள்ளது, மேலும் இது வடக்கில் கரும்பு நடவு செய்வதற்கான நேரமாகும்.
- பயிர்கள், பழங்கள், காய்கறிகள், முட்டை மற்றும் மீன்கள் அறுவடையில் ஈடுபடுவோர் அறுவடைக்கு முன்பும்

அறுவடையின்போது மற்றும் அறுவடை முடிந்த பிறகும் தனிப்பட்ட சுகாதாரம் மற்றும் சமூக தூரத்துக்கான அனைத்து நடவடிக்கைகளையும் பின்பற்ற வேண்டும்.

- அறுவடை / பறிக்கும் செயல்பாடுகள் மேற்கொள்ளும் போது விவசாயிகள் / தொழிலாளர்கள் 4 முதல் 5 அடி இடைவெளிவிட்டு செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இது செயல்பாடுகளை மேற்கொள்பவர்களுக்கு இடையில் போதுமான இடைவெளியை உறுதி செய்யும்.
- அனைவரும் முக கவசம் அணிவது மற்றும் குறித்த இடைவெளியில் கைகளை கழுவுவதை கட்டாயம் பின்பற்ற வேண்டும்.
- விவசாய செயல்பாடுகளுக்கு இடையில் ஓய்வு எடுக்கும்போதும் உணவு உட்கொள்ளும் போதும் வேளாண் பொருட்களை சேகரிக்கும் போதும் ஏற்றி இறக்கும் போதும் பாதுகாப்பான இடைவெளியாக 3 முதல் 4 அடி இடைவெளியினை பராமரிக்க வேண்டும்.
- சாத்தியமான இடங்களில் கள செயல்பாடுகளை கால தாமதப்படுத்தி, அதிக எண்ணிக்கையிலான நபர்கள் அதே நாளில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.
- முடிந்தவரை குடும்பத்தில் உள்ளவர்கள் மற்றும் தெரிந்தவர்களை மட்டுமே ஈடுபடுத்த வேண்டும் அல்லது முறையான விசாரணைக்குப் பின் தொழிலாளர்களை ஈடுபடுத்தலாம் இதன்மூலம் நோய் தொற்று இருப்பவர்கள் அல்லது சந்தேகத்துக்கு உரியவர்களை தவிர்க்க முடியும்.
- சாத்தியமான இடங்களில் இயந்திரங்கள் மூலம் வேளாண் செயல்பாடுகளை மேற்கொள்ளலாம். மேலும் குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே நபர்கள் இயந்திரத்துடன் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.
- அனைத்து இயந்திரங்களும் நுழைவு இடத்திலும் சரியான இடைவெளியிலும் சுத்தப்படுத்தப்பட வேண்டும். அனைத்து போக்குவரத்து வாகனங்கள்,

  கோனி சாக்கு பைகள் அல்லது பிற பேக்கேஜிங் பொருட்களும் சுத்தப்படுத்தப்பட வேண்டும்.
- விளைபொருட்களை சேகரிக்கும்போது 3-4 அடி இடைவெளியில் சிறிய குவியல்கள் ஆக்கவேண்டும். கூட்டத்தைத் தவிர்ப்பதற்கு 1-2 நபர்கள்/ குவியலுக்கு என ஒதுக்கப்பட வேண்டும்.
- மக்காச்சோளம் மற்றும் நிலக்கடலை அறுவடை செய்யும் இயந்திரங்களின் துப்புரவு மற்றும் தூய்மை முறையாக பராமரிக்கப்பட வேண்டும். உழவர் குழுக்களால் இயந்திரங்கள் பகிரப்பட்டு

பயன்படுத்தப்படும்போது அடிக்கடி கைகள் படும் பாகங்களில் சோப்பை கொண்டு கழுவி தூய்மை செய்ய
அறிவுறுத்தப்படுகிறது.

**<u>அறுவடைக்கு பிந்தைய, சேமிப்பு மற்றும் பண்ணை விளைபொருட்களின் விற்பனை:</u>**

- விளைபொருட்களை உலர்த்துதல் அடித்தல் தூற்றுதல் சுத்தம் செய்தல் தரம்பிரித்தல், அடுக்குதல் மற்றும் மூட்டை பிடித்தல் ஆகிய செயல்பாடுகள் மேற்கொள்ளும்போது, முக கவசம் அணிந்து செய்வதன் மூலம் காற்றின் வழியாக தூசு, மூச்சு குழலில் சென்று சுவாச கோளாறு ஏற்படுவதை தவிர்க்க முடியும்.
- அறுவடை செய்யப்பட்ட தானியங்கள், சிறுதானியங்கள், பருப்பு வகைகள் பண்ணை வீட்டில் சேமிப்பதற்கு முன் சரியான உலர்த்தலை உறுதிசெய்செய்ய வேண்டும். பூச்சி தொற்றுநோயைத் தடுக்க முந்தைய பருவங்களில் பயன்படுத்திய சணல் பைகளை மீண்டும் பயன்படுத்த வேண்டாம். 5% வேப்பம் கரைசலில் சிகிச்சையளிக்கப்பட்ட மற்றும் உலர்த்திய பைகளை பயன்படுத்தவும்.
- உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்கள் சிறந்த விலை கிடைப்பதற்கு சணல் பைகளில் சேமிக்க போதுமான முன் எச்சரிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். விவசாயிகளுக்கு பண்ணையில் அல்லது அருகிலுள்ள குளிர் சேமிப்பகங்கள் / கோடவுன்கள் / கிடங்குகளில் போதுமான எண்ணிக்கையில் சணல் பைகளில் சேமிக்க வேண்டும்.
- பண்ணை விளைபொருட்களை ஏற்றுவதற்கும் கொண்டு செல்வதற்கும், சந்தைகள் / ஏல தளங்களில் விற்பனையில் பங்கேற்கும்போதும் போதுமான தனிப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.
- விதை உற்பத்தியாளர் விவசாயிகளுக்கு விதைகளை துணை ஆவணங்களுடன் விதை நிறுவனங்களுக்கு கொண்டு செல்ல அனுமதி உண்டு. மேலும் அவர்கள் பணம் பெறும்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும்.
- விதை பதப்படுத்துதல் / பேக்கேஜிங் ஆலைகள் மற்றும் விதை உற்பத்தி செய்யும் மாநிலங்களிலிருந்து (தெற்கிலிருந்து வடக்கு) கரீப் பருவ பயிர்களுக்கான விதை தேவைப்படும் மாநிலங்களுக்கு தேவையான அளவு விதை இருப்பு இருக்க வேண்டும். உதாரணமாக

வடக்கில் ஏப்ரல் மாதத்தில் விதைப்பதற்கு பசுந்தீவனத்திற்கான எஸ்.எஸ்.ஜி விதை தென் மாநிலங்களிலிருந்து வருகிறது .

- தக்காளி, காலிஃபிளவர், பச்சை இலை காய்கறிகள், வெள்ளரிகள் மற்றும் பண்ணைகளிலிருந்து வரும் பிற கொடி வகை காய்கறிகள் போன்ற காய்கறிகளை நேரடியாக விற்பனை / வழங்குவதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும்.

<u>வயலில் வளர் நிலையில் உள்ள பயிர்கள்:</u>

- கோதுமை வளரும் பெரும்பாலான பகுதிகளின் வெப்பநிலை இன்னும் நீண்ட கால சராசரிக்குக் குறைவாகவே உள்ளது. ஏப்ரல் 10 க்கு அப்பால் குறைந்தது 10-15 நாட்களுக்கு கோதுமை அறுவடை தாமதப்படுத்தலாம், எனவே விவசாயிகள் கோதுமையை எந்தவொரு குறிப்பிடத்தக்க இழப்பும் ஏற்படாமல் ஏப்ரல் 20 வரை தாமதப்படுத்தலாம், இது கொள்முதல் தளவாடங்கள் மற்றும் தேதிகள் அறிவிப்பதற்கான போதுமான நேரத்தை அளிக்கிறது.
- தென்மாநிலங்களில் கதிர் பால் பிடிக்கும் பருவத்தில் உள்ள ரபி நெற்பயிரில் கழுத்து குலை நோய் பரவலாக காணப்படுகிறது. பரிந்துரைக்கப்பட்ட பூஞ்சைக் கொல்லி மருந்தினை தெளிக்கும் போது முறையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும்.
- நெல் அறுவடை கட்டத்தில் ஏதேனும் பருவ மழை பெய்தால், விதை முளைப்பதை தடுக்க 5% உப்பு கரைசலை தெளிக்கவும்.
- மாம்பழம் போன்ற பழம்தரும் கட்டத்தில் உள்ள தோட்டக்கலை பயிர்களில், நுண்ணூட்டச்சத்து அளித்தல் பயிர் பாதுகாப்பு போன்ற வயல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அதற்கான இடுபொருட்களை கையாளுதல் தெளிப்பு செய்தல் மற்றும் அதற்கு தேவைப்படும் உபகரணங்களைத் கழுவுதல் போன்றவற்றின் முறையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- கோடை பருவத்தில் நெல் தரிசு வயலில் உள்ள பயறுவகை பயிர்களில் மஞ்சள் தேமல் நோய் வராமல் தடுப்பதற்கு முறையான வெள்ளை ஈ மேலாண்மை முறைகளை பாதுகாப்புடன் மேற்கொள்ள வேண்டும்